## திருத்தம்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதி III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.07.10 ஆந் திகதிய 2497 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதி III ஆம் தரத்திற்கு (புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026 என்ற தலைப்பிலான அறிவித்தலின் தமிழ் மொழி மூல அறிவித்தலில் பந்தி 02 மற்றும் இலக்கம் 3 இன் கீழ் கல்வித் தகைமைகள் என்ற உப பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை பதிலீடு செய்வதன் மூலம் அவ் அறிவித்தல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

I. **பந்தி 02**

இந்தத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 28 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த ஆட்சேர்ப்பு நடைபெறுவதுடன் அவை அனைத்தையும் அல்லது சிலவற்றை மட்டும் நிரப்புவது அல்லது எதையும் நிரப்பாதிருத்தல் தொடர்பான இறுதி தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கே உரியது. நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். இந்தப் பரீட்சை 2026 ஒற்றோபர் மாதம் கொழும்பில் மட்டும் நடத்தப்படும்.

II. **உப பிரிவு இலக்கம் 3. கல்வித் தகைமைகள்**

(அ) புள்ளிவிபரம் கணிதம், பொருளாதாரம், மக்களியல், சனத்தொகை கற்கை, கணினி, விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூகவியல் அல்லது வரைபடவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடம் பிரதான பாடமாக உள்ளது.

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(b) இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(c) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 254 பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வகுப்பு தரத்துடன் கூடிய சிறப்பு பட்டப்படிப்பு

அல்லது

(ஆ) புள்ளிவிபரம் கணிதம், பொருளியல், மக்களியல் சனத்தொகை கற்கை, கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், புவியியல், சமூகவியல் அல்லது வரைபடவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது ஒரு பாடம் பிரதான பாடமாக உள்ள,

(a) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(b) இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற அல்லது

(c) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல் கலைக்கழகச் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) தரத்துடன் கூடிய பொதுப் பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

2. 2026.07.10 ஆந் திகதி வெளியிடப்பட்ட மூல விண்ணப் பங்கள் கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் அவ்வாறே நடைமுறையில் இருக்கும் என்பதுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026.08.24 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

3. இப்போட்டிப் பரீட்சைக்காக ஏற்கனவே விண்ணப்பித் துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

செயலாளர்.

நிதி. திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு,
2026.

08-61